சார்பு நீதிமன்றம், பல்லடம்.

MCOP.No. 31/2023

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி : RW1

பெயர் மற்றும் வயது : கார்த்திக்

தந்தை பெயர் : ராமலிங்கம்

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாள் வியாழக்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**3**ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை

நான் தற்போது வட்டார போக்குவரத்து அலுவலகம் திருப்பூர் தெற்கு அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் சம்மனின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சியம் அளிக்க என்கு வழங்கப்பட்ட நடைமுறை கடிதம் எ.ம.சா.ஆ **1** ஆகவும், TN 67 AP 9727 கார் வாகனத்திற்கான ஆய்வு அறிக்கை எ.ம.சா.**2** ஆகவும், மேற்படி TN 67 AP 9727 க்கான வாகன சோதனை அறிக்கை அபராத ரசீதுடன் எ.ம.சா.ஆ- **3** ஆகவும், மேற்படி வாகனத்திற்கு விபத்து சமயத்தில் வாகன ஓட்டிக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என அறிக்கை வழங்கப்பட்டு அபராதமாக ரூ. 5 ஆயிரம் வசூலிக்கப்பட்டது. TN 39 R 0443 என்ற இருசக்கர வாகனத்திற்கு ஆய்வு அறிக்கை எ.ம.சா.ஆ **4** ஆகவும், மேற்படி TN 39 R 0443 வாகனத்திற்கான சோதனை அறிக்கை எ.ம.சா.ஆ **5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அந்த வாகனத்தை ஆய்வு முடித்து காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. முதல் எதிர்மனுதாரர் எங்களது அதிகார எல்லைக்குள் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எங்களது ஆவணங்களின் படி வாகன ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒன்றாம் எதிர்மனுதாரர் வேறு ஏதேனும் அலுவலகத்தில் முகவரி காட்டி ஓட்டுனர் உரிமம் பெற்று இருந்தால் எங்களுக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதானநான் ஆவணிகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான் மேற்படி மனுதாரருக்கு இழப்பீடு வழங்க மூன்றாவது எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரதுகையெழுத்து பெறப்பட்டது.

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.